**புகையிலை நிறுவனமானது எவ்வாறு மக்கள் மத்தியில் தவறான தகவல்களை பரப்புகிறது? உண்மையை வெளிக்கொணரல்**

**அறிமுகம்**

இலங்கையில், புகைத்தல் பாவனையால் தினமும் மரணிக்கின்ற வாடிக்கையாளர்களை ஈடு செய்வதற்காக புகையிலை நிறுவனமானது சிறுவர்களையும், இளைஞர்களையும் இலக்கு வைத்து பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றது. இவை எமது நாட்டில் காணப்படும் சட்டங்களை மீறும் வகையிலும் இடம்பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் 2006ஆம் கொண்டு வரப்பட்ட மதுசாரம் மற்றும் புகையிலை மீதான அதிகார சபைச் சட்டத்தின் படி (NATA Act No. 27 of 2006: பிரிவு 35) புகைத்தல் மற்றும் மதுசார விளம்பரங்கள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் புகையிலை பாவனையை ஊக்குவிக்கும் படங்கள், சின்னங்கள், தகவல்கள் என விடயத்தையும் மேற்கொள்ளுதல் வெளியிடுதல் மற்றும் விளம்பரங்கள் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

எனினும், புகைகயிலை நிறுவனமானது புகைத்தல் பாவனையில் காணப்படுகின்ற பிரச்சினைகளை மறைத்து தங்களது விளம்பரங்களை மேற்கொள்கின்றது. குறிப்பாக சமூக வளைதலங்கள், இணைய வழி ஊடகங்கள், திரைப்படங்கள் என பல வழிகளினூடாகவும் சிவர்களுக்கும், இளைஞர்களுக்கு புகைத்தல் பாவனையை கவர்ச்சியாகக் காண்பிப்பதற்கும், புகைத்தல் மீதான ஈர்ப்பை ஏற்படுத்துவதற்கும் முயற்சிகளை எடுத்து வருகின்றமைக் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு புகைத்தலுக்கு கவர்ச்சியை ஏற்படுத்துவதான துசட்டத்திற்கு புறம்பானதாகும். மேலும் எதிர்கால சந்ததியினரை ஏமாற்றுவதற்காக புகையிலை நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்ற விளம்பரங்களாகும். இது போன்ற விளம்பரங்களை வெளிக்கொணருவதும், அவற்றை தடுப்பதும், அவ்விளம்பரங்களுக்கு ஏமாறாமலிருப்பதற்கான எதிர்ப்பு சக்தியினை இளைஞர்களுக்கும், சிறுவர்களுக்கும் பெற்றுக்கொடுப்பதானது மிகவும் அவசியமானதாகும்.

## மறைமுகமாக மேற்கொள்ளப்படும் புகையிலை விளம்பரங்கள்

**சில ஊடகங்களில் இடம்பெறுகின்ற மறைமுக புகையிலை விளம்பரங்கள்**

சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், சின்னத்திரை நாடகங்களிலும் புகைத்தலை கவர்ச்சிகரமாகக் காண்பிப்பதற்கு முயற்சிக்கின்றனர். உதாரணமாக : இளைஞர்கள் புகைத்தல் பாவனையில் ஈடுபடலாம், ஒரு வீரனாக அல்லது ஒரு காட்சியில் தனது பலத்தை காண்பிப்பதற்கு சிகரட்டை ஒரு சின்னமாகப் பயன்படுத்துதல், புகைத்தலை சாதாரணமாகக் காண்பித்தல், அனைவரும் செய்யக்கூடிய செயலாக காண்பித்தல் போன்றன உள்ளடங்கும்.

மேலும் சஞ்சிகைகள் மற்றும் சில பத்திரிகைகளில் புகைத்தலை கவர்ச்சியாகக் காண்பிக்கும் தலைப்புக்களை பிரசுரித்தல், மற்றும் படங்களை பிரசுரித்தல் போன்றவையாலும் புகையிலை பொருட்கள் விளம்பரப்படுத்தப்படுகின்றது.



**Regulations must be data-driven; not based on fallacies**

Tuesday, 26 March 2024 00:00 - 320

**சமூக ஊடகங்களில் இடம்பெறுகின்ற புகையிலை விளம்பரங்கள்**

இன்றைய காலகட்டத்தில் அதிகமானோர் குறிப்பாக இளைஞர்கள் சமூக வளைதலங்களில் அதிகளவு ஈர்ப்பையுடையவர்களாவர். ஆகவே பயன்பாட்டில் இருக்கின்ற அனைத்து வகையான சமூக வளைதலங்களையும் பயன்படுத்தி சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் என அனைத்து தரப்பினரையும் இலக்கு வைத்து புகைத்தல் மற்றும் புகையிலை பொருட்கள் வெவ்வேறு கோணங்களில் விளம்பரப்படுத்தப்படுகின்றன.






**திரைப்படங்களில் புகையிலை விளம்பரங்கள்**

2023 நவம்பர் தொடக்கம் 2024 பெப்பரவரி வரை வெளிவந்த தென்னிந்திய தமிழ் திரைப்படங்களில் மதுசாரம் சிகரட் உட்பட ஏனைய போதைப் பொருட்களை விளம்பரப்படுத்தப்பட்ட விதத்தினை ஆராய்ந்து பார்த்த போது, ஆய்விற்குட்படுத்தப்பட்ட 23 திரைப்படங்களில் 53.26 நிமிடங்கள் சிகரட் விளம்பரங்கள் விளம்பரங்கள் இணைக்கப்பட்டிருந்தமைக் குறிப்பிடத்தக்கது. இவ்விளம்பரங்கள் இளைஞர்களை இலக்குை வைத்து கவர்ச்சகரமாக திரைப்படங்களில் இணைக்கப்பட்டிருந்தன.




**இளைஞர்களை இலக்கு வைத்து இலத்திரனியல் சிகரட் வகைகளை புகையிலை சந்தையில் அறிமுகம் செய்கின்றமை.**

இலத்திரனியல் சிகரட்டுக்களை அறிமுகப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் பின்புலத்தில் புகையிலை நிறுவனம் இருப்பதாக சான்றுகள் காணப்படுகின்றன. 2006 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க NATA சட்டத்தின் 2016 ஆம் ஆண்டு திருத்தத்தின் படி, புகையிலையைக் கொண்ட எநதவொரு புகையில்லா பொருட்கள்'', சுவையூட்டப்பட்ட அல்லது நிறமூட்டப்பட்ட புகையிலை பொருட்கள்'', புகையிலையை உள்ளடக்கியுள்ள இலத்திரனியல் சிகரட்டுக்கள்'' ஆகியவற்றின் உற்பத்தி, இறக்குமதி மற்றும் விற்பனை ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் இவை புகைத்தல் பாவனையின் உண்மையான தாக்கங்களை மறைத்து இவை சமூக வளைதளங்களினூடாகவும், இணையத்தளங்களினூடாகவும் விளம்பரப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகிறன.







**விவசாயிகளை ஊக்குவிப்பதன் மூலம் புகையிலை பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல்**

புகையிலையை பயிரிடுவதால் மண் அரிப்பு, விளைநிலங்களை இழப்பது மற்றும் அத்தியாவசிய நீர் வளங்களைக் பற்றாக்குறை ஏற்படுதல் என பல பிரச்சினைகள விளைவிக்கின்றது மேலும், புகையிலையை ஏனைய பயிர்களுடன் பயிர்களுடன் ஒப்பிடும்போது குறைந்த இலாபத்தை அளிக்கக்கூடிய பயிராகவும் காணப்படுகின்றது. புகையிலை பயிர்ச்செய்கையானது மனிதனின் ஆரோக்கியத்திற்கும், பௌதீக சூழலுக்கும் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது.

எனினும், புகையிலை பயிர்ச்செய்கையால் ஏற்படுகின்ற அனைத்து விளைவுகளையும் மறைத்து விவசாயிகளை ஊக்குவித்தல் எனும் போலியான போர்வையில் புகையிலை நிறுவனம் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றது. ‘‘சமூக பொறுப்பு செயற்றிட்டம்'' , ‘‘நிலையான அபிவிருத்தி செயற்றிட்டம்'' என்கின்ற செயற்றிட்டங்களை விவசாயிகளுக்கு வழங்கி தமது நிறுவனத்தின் இலபத்தை மாத்திரம் இலக்காகக் கொண்டு புகையிலை நிறுவனம் தமது தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றமைக் குறிப்பிடத்தக்கது.







**சிகரட் விள்பனையை அதிகரிப்பதற்காக சில்லறை விற்பனையாளர்களுக்கான வரப்பிரசாதங்கள்**

சிகரட் விற்பனையை ஊக்கப்படுத்துவதற்காக புகையிலை நிறுவனத்தால் சில்லறை விற்பனையாளர்களுக்கும், கடைகளுக்கும் வழங்கப்படுகின்ற சின்னமே ''அபிஷேகம்'' ஆகும். இதன் மூலம் சில வரப்பிரசாதங்களை வழங்கி விற்பனையாளர்களை ஊக்குவித்து, சிகரட் விற்பனையை அதிகரிப்பதனூடு புகையிலை நிறுவனத்தின் இலாபத்தை தக்க வைத்துக்கொள்வதே குறிப்பிட்ட நிறுவனத்தின் இலக்காகும்.

